# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க,

# வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

---

[1981, திசெம்பர் மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, திசெம்பர் மாதம் 18 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.10 தபாற் செலவு : சதம் 75

# 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

[1981, திசெம்பர் மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 100/80
1424

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்தகைய அதிகாரசபையின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் குறித்துரைப்பதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமான தொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

## பாகம் I

## வீதி அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபித்தலும் அதன் அமைப்பும்

2. (1) வீதி அபிவிருத்தி அதிகாரசபை என அழைக்கப்பட வேண்டியதான ஓர் அதிகாரசபை தாபிக்கப்படல் வேண்டும். அது, இதனகத்துப்பின்னர் " அதிகாரசபை " எனக் குறிப்பிடுசெய்யப்படும். *வீதி அபிவிருத்தி அதிகார சபையைத் தாபித்தல்.*

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறுவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன், அது, அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம், அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) அதிகாரசபையானது, அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன், கிளை அலுவலகங்களைத் தாபித்துப் பேணிவரலாம்.

3. (1) அதிகாரசபை, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— *அதிகார சபையின் உறுப்பினர்கள்.*

(அ) இதனகத்துப்பின்னர் " நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் " என்று குறிப்பிடுசெய்யப்படும் ஐந்து உறுப்பினர்கள்; இவர்கள் குடியியற் பொறியியல், பெருந்தெருக்கள் பொறியியல், வர்த்தகம், நிதி அல்லது நிருவாகம் என்னும் துறையில் ஆழ்ந்த அனுபவம் உடையவர்களெனவும் அத்துறையில் ஆற்றல் வாய்ந்தவர்களெனவும் அமைச்சருக்குத் தோன்றும் ஆட்களுள்ளிருந்து அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஏனைய ஐந்து உறுப்பினர்கள் ; இவர்கள்—

(i) பெருந்தெருக்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான ஒரு சிரேட்ட அலுவலர் ;

(ii) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான ஒரு சிரேட்ட அலுவலர் ;

(iii) மின்சக்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான ஒரு சிரேட்ட அலுவலர் ;

(iv) போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான ஒரு சிரேட்ட அலுவலர் ; அத்துடன்

(v) பெருந்தெருக்கள் பணிப்பாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள்.

(2) அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை அதிகாரசபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(3) ஆளொருவர், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக வந்தால் அவர், அதிகாரசபை உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் உறுப்பினராக இருக்கவென ஆளொருவரை நியமிப்பதற்கு முன்னர், அமைச்சரானவர், அதிகாரசபையின் உறுப்பினர் என்ற வகையில் அவரது பணிகளை நிறைவேற்றுவதைப் பங்கமானமுறையில் பாதிக்கும் சாத்தியமுடைய நிதி சார்ந்த அக்கறையை அல்லது வேறு அக்கறையை அத்தகைய ஆள் உடையவரல்லர் எனத் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அத்துடன், அதிகாரசபையின் உறுப்பினர் எவருக்கும் அத்தகைய ஏதேனும் அக்கறை இல்லையென அமைச்சர் காலத்துக்குக்காலம் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளவும் வேண்டும். அதிகாரசபையின் உறுப்பினராக அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அல்லது அதிகாரசபை உறுப்பினராக நியமிப்பதற்கு அமைச்சர் நியமிக்க உத்தேசிக்கும் எவரேனுமாள், அவ்வாறு செய்யும்படி அமைச்சரினால் வேண்டப்படும்போதெல்லாம், அவரது கடமைகளை இவ்வுட்பிரிவின்கீழ் அவ்வுறுப்பினர் புரிவதற்கு அவசியமென அமைச்சர் கருதுகின்றவாறான அத்தகைய தகவலை, அமைச்சருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(5) அதிகாரசபையினால் செய்யப்பட்ட அல்லது செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எவ்வகையிலேனும் அக்கறைகொண்டுள்ள அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர், அதிகாரசபையின் கூட்டமொன்றில் தமது அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிவிடுகை, அதிகாரசபையின் கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளில் பதியப்

படுதலும் வேண்டும் என்பதுடன், அவ்வுறுப்பினர் அந்த ஒப்பந்தம் தொடர்பில் அதிகாரசபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிவில் பங்குபற்றுதலுமாகாது.

(6) அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், (8) ஆம், (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக அவரை நியமிக்கும் நோக்கில் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறுன, அந்நியமனத் தேதியிலிருந்து கணக்கிடப்படும் மூன்றாண்டுகளை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும். அத்துடன் (8) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும் :

ஆயின், அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரினது பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கென அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர், அவர் முன்னதாகவே பதவியை வறிதாக்கினுலொழிய, அவர் எந்த உறுப்பினருக்குப் பின்னர் பதவிக்கு வருகின்றுரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) ஒன்பதாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, தவிசாளரின் பதவிக்காலம், அதிகாரசபையில் அவர் உறுப்பினராகவிருக்கும் காலப் பகுதியாதல் வேண்டும்.

(8) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான காரணம் எதுவும் காட்டாது, அவ்வாறு அகற்றலாம் என்பதுடன், அத்தகைய அகற்றுகை பற்றி எந்நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தலும் ஆகாது.

(9) அதிகாரசபையின் எவ்வுறுப்பினர் தொடர்பாக (8) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று அமைச்சரினுல் ஆக்கப்படுகின்றதோ அவ்வுறுப்பினர் அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று அவரது பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(10) அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், உறுப்பினர் ஒருவரென்ற அல்லது தவிசாளரென்ற அவரது பதவியை, அமைச்சருக்கு அதன்சார்பில் முகவரியிடப்பட்ட கடிதமூலம் எந்நேரத்திலும் துறக்கலாம்.

(11) சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர் அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து, அப்போது—

(அ) அவர் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவராயின் அமைச்சர், (1) (அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அவ்வுறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேருெருவரை நியமிக்கலாம் ; அல்லது

(ஆ) அவர் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) முதல் (iii) வரையிலான உட்பந்திகளின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராயின், அவ்வுறுப்பினரைப் பெயர் குறித்து நியமித்த அமைச்சர் அவ்வுறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோராளைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(12) சுகவீனம் காரணமாக, வேறு இயலாமை காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அதிகாரசபையின் தவிசாளர் அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து, அமைச்சர் தவிசாளராகச் செயலாற்றுவதற்கென வேறு எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை நியமிக்கலாம்.

(13) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியமும், படிகளும் ஏனைய செலவுகளும் அதிகாரசபையின் உறுப்பினர்கள் எல்லோருக்கும் அல்லது எவருக்கும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கொடுக்கப்படலாம்.

**அதிகார சபையின் நடவடிக்கைகள்.**

4. (1) அதிகாரசபையின் தவிசாளர், தாம் சமுகமாயிருக்கும் அதிகாரசபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயில்லாதிருப்பின், சமுகமாயுள்ள உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்படும் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது அவசியமென அது கருதும்போதெல்லாம் கூடுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் ஆள், அவரது சொந்த வாக்குடன் அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் எக்கூட்டத்திற்குமான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) அதிகாரசபையானது அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதனைப் பொருட்படுத்தாது செயலாற்றலாம்; அத்துடன் அதிகாரசபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடமிருந்ததென்ற அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் அல்லது பெயர்குறித்த நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருந்ததென்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, அதிகாரசபையின் கூட்டங்கள் தொடர்பிலான நடைமுறைகள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பிலுமான விதிகளை அதிகாரசபை ஆக்கலாம்.

**அதிகார சபையின் இலச்சினை.**

5. (1) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபைத் தவிசாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை, அதிகாரசபையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையின் இரண்டு உறுப்பி னர்களின் முன்னிலையிலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அத்தகைய இரு உறுப்பினர்களும் தாம் சமுக மாயிருந்தமைக்கு அடையாளமாக அந்தச் சாதனத்தில் அல்லது ஆவ ணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

**குழுக்களைத் தாபிப்பதற்கு அதிகார சபைக்குள்ள தத்துவம்.**

6. (1) அதிகாரசபையானது அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் முறையாகப் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் என அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்ட குழுக்களைத் தாபிக்கலாம்.

(2) அதிகாரசபையானது, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அதன் தத்துவங்களிலும் பணிகளிலும் கடமைகளிலும் அத்தகையனவற்றை அத்தகைய குழுக்களுக்குக் கையளிக்கலாம்.

(3) ஓராமுட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவும் அத் தகைய குழுவின் கூட்ட நடப்பெண்ணையும், அத்தகைய குழுவின் கூட்டங் களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும் தீர்மானித்தல் வேண்டும்.

**வீதி அபிவிருத்தி ஆலோசனைச் சபை.**

7. (1) இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும் வீதி அபிவிருத்தி ஆலோசனைச் சபையொன்று தாபிக்கப்படுதல் வேண் டும் ; அது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பெருந்தெருக்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் ; இவர் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) மின்சக்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும், அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(இ) தொலைச்செய்திப் போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும், அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவரு மான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஈ) உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும், அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(உ) அரச காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும், அத்தகைய அமைச் சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலு வலர் ஒருவர் ;

(ஊ) போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும், அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(எ) சுற்றுலா என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும், அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ஏ) அதிகாரசபையின் பொது முகாமையாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் ; இவர் சபையின் செயலாளராகச் செயலாற்றுதல் வேண்டும் ;

(ஐ) பெருந்தெருக்கள் பணிப்பாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஒ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஓ) 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரசபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சாரசபையின் பொது முகாமையாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஔ) 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபைச் சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் ; அத்துடன்

(க) பெருந்தெருக்கள் பொறியியல் அல்லது குடியியற் பொறியியலில் ஆழ்ந்த அனுபவம் உடையவர்களெனவும் ஆற்றல் வாய்ந்தவர்களெனவும் தோன்றும் ஆட்களுள்ளிருந்து அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்று ஏனைய உறுப்பினர்கள்.

இப்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர் இப்பிரிவில் இனிமேல் "சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்" என்று குறிப்பீடு செய்யப்படுவார்.

(2) சபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) வீதி ஆராய்ச்சி, வீதி திட்டமிடுதல் மற்றும் வீதி அபிவிருத்தி என்பன மீதான கொள்கை பற்றியும் வழிவகைகள் பற்றியும் அமைச்சருக்கு ஆலோசனையளித்தல் ; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்றாற்போல அமைச்சரினால் அல்லது அதிகாரசபையினால் சபைக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடிய, அதிகாரசபையின் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை, பிர

யோசித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் தொடர்பிலான எக்கருமத்தின்மீதும், விடயத்துக்கேற்றுற்போல, அமைச்சருக்கு அல்லது அதிகாரசபைக்கு ஆலோசனையளித்தல்.

(3) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பதன்மூலம், பதவி துறப்பதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னதாகவே பதவியை வறிதாக்கினுலொழிய மூன்றுண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதினுல், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றுவதற்கான காரணம் எதுவும் காட்டாது அவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்; அத்துடன் அத்தகைய அகற்றுகை பற்றி எந்நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்துதல் ஆகாது.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்ட கடிதமூலம் எந்நேரத்திலும் அவரது பதவியைத் துறக்கலாம்.

(6) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறந்தால், அல்லது பதவி துறந்தால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால், அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் (க) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்துட் கொண்டு, இறந்த, பதவிதுறந்த அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட உறுப்பினரின் இடத்தில் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கென வேருெரு ஆளை நியமிக்கலாம்.

(7) ஆரும் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டுள்ளவரான உறுப்பினர் ஒருவர், இறப்பதன்மூலம், பதவி துறப்பதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னதாகவே பதவியை வறிதாக்கினுலொழிய, அவர் எவ்வுறுப்பினரை அடுத்துப் பதவிக்கு வருகின்ருரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுருதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(8) மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கு சுகவீனம் காரணமாக, வேறு இயலாமை காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய முடியாதவராக இருக்கின்றவிடத்து, அது பற்றி எழுத்தில் அமைச்சருக்கு அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் (க) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றவென வேருெராளை நியமிக்கலாம்.

(9) பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லாது பதவியை வறிதாக்குகின்ற சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(10) சபையின் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றதென்ற அல்லது சபையின் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றதென்ற காரணத்தினுல் மட்டும், சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகாது.

(11) சபையின் கூட்டமொன்று இரண்டு மாதங்களுக்கொரு தடவையாவது நடாத்தப்படுதல் வேண்டும்.

(12) தவிசாளர் அல்லது அவரில்லாதபோது, சமூகமாயிருக்கும் உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் ஒருவர் சபைக் கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும்.

(13) சபையின் எக்கூட்டத்திலேனும் முடிவு எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவும், சமூகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குமூலம் முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாக இருக்கும் விடயத்தில், தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றுடையவராக இருத்தல் வேண்டும்.

(14) சபையின் கூட்டம் எதற்குமான கூட்ட நடப்பெண் ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும்; அத்துடன் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, சபை அதன் சொந்த நடவடிக்கையை ஒழுங்குபடுத்தலாம்.

(15) சபையின் உறுப்பினர்கள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் II

## வீதி அபிவிருத்தி இடப்பரப்புகளை வெளிப்படுத்துதலும் அதிகாரசபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

இடப்பரப்புகளை வீதி அபிவிருத்தி இடப்பரப்புகளென அமைச்சரின் கட்டளை மூலம் வெளிப்படுத்துதலும் அக்கட்டளைகளின் பயனும்.

8. (1) அமைச்சர் உள்ளூர், மற்றும் தேசிய திட்டமிடல் தேவைப்பாடுகளைக் கருத்துக்கெடுத்துக் கொண்டு, ஏதேனும் இடப்பரப்பில் வீதி அபிவிருத்தியை ஒழுங்குபடுத்துவதும் கட்டுப்படுத்துவதும் உசிதமானதென அபிப்பிராயப்பட்டால் அவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய இடப்பரப்பை வீதி அபிவிருத்தி இடப்பரப்பொன்றென வெளிப்படுத்தலாம்; அது இதனகத்துப்பின்னர் "அபிவிருத்தி செய்வதற்கான இடப்பரப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) இடப்பரப்பொன்றை அபிவிருத்தி செய்வதற்கான இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்துகின்ற (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று, அத்தகைய இடப்பரப்பின் எல்லைகளையும் அளவுகளையும் தருவதன்மூலம் அவ்விடப்பரப்பை வரையறுத்தல் வேண்டும்.

(3) அபிவிருத்தி செய்வதற்கான இடப்பரப்பொன்றை வெளிப்படுத்திய தன்மேல், அதிகாரசபையின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடனன்றி, ஏதேனும் அரசாங்க முகவர் நிலையத்தினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் வீதி அபிவிருத்தி வேலை எதுவும் நிறைவேற்றப்படுதலாகாது அல்லது நிறைவேற்றப்படுவித்தலாகாது.

அதிகார சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.

**9.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, அபிவிருத்தி செய்வதற்கான ஏதேனும் இடப்பரப்புக்குள்ளான அதிகார சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) காலத்துக்குக்காலம் அமைச்சரினால் அதிகார சபைக்குக் கொடுக்கப்படக்கூடிய எவையேனும் பணிப்புரைகளுக்கமைவாக, அத்தகைய இடப்பரப்புகளுக்குள்ளாக ஒன்றிணைந்த வீதி திட்டமிடலையும் வீதி அபிவிருத்தியையும் நிறைவேற்றுதல் ;

(ஆ) காலத்துக்குக்காலம் அமைச்சரினால் அதிகார சபைக்குக் கொடுக்கப்படக்கூடிய எவையேனும் பணிப்புரைகளுக்கமைவாக, அத்தகைய இடப்பரபுகளில் இடம்பெறும் ஒன்றிணைந்த வீதி திட்டமிடலுடன் ஒத்திருக்கின்ற வீதி அபிவிருத்தி வேலைகள், தொழிற்பாடுகள், சேவைகள் என்பன பற்றிய ஒன்றுக்கொன்று உறவான நிகழ்ச்சித்திட்டங்களை அத்தகைய இடப்பரப்புகளில் செயற்படுத்துதல் ;

(இ) மூலதன முதலீட்டுத் திட்டங்கள் உட்பட, வீதி அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தலும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுவதற்கென அமைச்சரிடம் சமர்ப்பித்தலும் ;

(ஈ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் நிறைவேற்றுவதனைப் பொறுப்பேற்றல் ;

(உ) இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுடன் நேரடியாகவாயினுஞ்சரி, அல்லது கூட்டு முயற்சி என்ற வகையிலாயினுஞ்சரி, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தை அல்லது செயற்றிட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளுதலும், புரிதலும், நிறைவேற்றலும் ;

(ஊ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தை அல்லது செயற்றிடத்தைச் செய்து முடிக்க எவரேனும் ஆள் தவறியமையினால், செய்து முடிக்கப்படாத அத்தகைய கருத்திட்டத்தை அல்லது செயற்றிட்டத்தைச் செய்து முடிப்பதற்குப் பொறுபேற்றல் ;

(எ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வீதி அபிவிருத்தித்திட்டங்களையும் மூலதன முதலீட்டுத் திட்டங்களையும் செயற்படுத்துதல் ;

(ஏ) அத்தகைய இடப்பரபுக்களில் மூலதன வீதிச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தல் ;

(ஐ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலும், வைத்திருத்தலும் அல்லது அதனால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கையுதிர்த்தல் ;

(ஒ) ஏதேனும் அரசாங்க முகவர் நிலையத்தின் வேண்டுதலின் பேரில் வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் திட்டமிடற் செயற்

திட்டங்களையும் அத்தகைய முகவர் நிலையத்தின் சார்பில் தயாரித்தலும் அத்தகைய கருத்திட்டத்தின் அல்லது செயற்றிட்டத்தின் நிறைவேற்றுகையுடன் ஒருங்கிணைத்தலும் அல்லது அதன் நிறைவேற்றுதலில் உதவியளித்தலும் ;

(ஓ) அத்தகைய இடப்பரப்புகளில் அரசாங்க முகவர் நிலையங்களின் அல்லது வேறு ஆட்களின் நலனுக்காக வீதி திட்டமிடல் சேவைகளை ஏற்பாடு செய்தல் ;

(ஔ) அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக கட்டணங்களை அறவிடுதல் ;

(க) காசாகவேனுஞ்சரி, அல்லது வேறுவகையாகவேனுஞ்சரி, கொடைகளை, நன்கொடைகளை, அளிப்புக்களை அல்லது மானியங்களை ஏற்றுக்கொள்ளுதலும் அதிகார சபையின் குறிக்கோள்களுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பயன்படுத்துதலும் ; அத்துடன்

(ங) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதன், நிறைவேற்றுவதன் அத்துடன் புரிவதன் இடைநேர்விளைவான அல்லது அவற்றின் விளைவாந்தன்மையினவான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

(2) ஏதேனும் அபிவிருத்தி செய்வதற்கான இடப்பரப்பினுள் வீதித் திட்டமிடல், வீதி அபிவிருத்தி என்பன தொடர்பிலான ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்தை அல்லது அபிவிருத்தி வேலையை செயற்படுத்தும்போது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும் அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தை அல்லது அபிவிருத்தி வேலையை விடயத்திற்கு ஏற்றவாறு ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது உள்ளூரதிகாரசபையின் ஆலோசனையுடன் செயற்படுத்துதல் அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

**அமைச்சரின் பணிப்புரைகள்.**

10. (1) அமைச்சரானவர், அதிகாரசபையால் அதன் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும் பிரயோகிக்கப்படுதல், நிறைவேற்றப்படுதல், புரியப்படுதல் என்பன பற்றிய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளைக் காலத்துக்காலம் அதிகாரசபைக்கு வழங்கலாம் என்பதுடன் அதிகாரசபை அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சர், அதிகாரசபையின் ஆதனம் மற்றும் அலுவல் என்பன தொடர்பிலான விவரத்திரட்டுகள், கணக்குகள், அத்துடன் வேறு தகவல் என்பனவற்றை தாம் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் தமக்குக் கொடுத்துதவுமாறு அதிகாரசபையைக் காலத்துக்காலம் எழுத்தில் பணிக்கலாம் என்பதுடன், அதிகாரசபையானது அத்தகைய ஒவ்வொரு பணிப்புரையையும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

**தத்துவங்கள் முதலியன அதிகாரசபையால் கையளிக்கப்படுதல்.**

11. அதிகாரசபையானது இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களுள், கடமைகளுள் அல்லது பணிகளுள் எதனையும் அதிகாரசபையின் தவிசாளருக்கு அல்லது எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம்.

## பாகம் III

### அதிகாரசபையின் பணியாட்டொகுதியினர்

அதிகாரசபையின் பொது முகாமையாளர்.

**12.** (1) அதிகாரசபையானது அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடன், அதிகாரசபையின் பொது முகாமையாளரொருவரை நியமித்தல் வேண்டும்.

(2) பொது முகாமையாளர், கொள்கை விடயங்களில் அதிகாரசபையின் பொதுவான பணிப்புக்கமைவாக அதிகாரசபையின் தொழில்களை நெறிப்படுத்துவதற்கும் அதிகாரசபையின் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றை ஒழுங்கமைத்து நிறைவேற்றுவதற்கும் அதிகாரசபையின் ஊழியர்களது நிருவாகக் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) பொது முகாமையாளர் அதிகாரசபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன் அவசியமானதென காலத்துக்காலம் அவர் கருதக்கூடியவாறான அவரது தத்துவங்களுள், பணிகளுள், கடமைகளுள், அத்தகையனவற்றை அதிகாரசபையின் வேறு எவரேனும் ஊழியருக்கு எழுத்தில் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய எவையேனும் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் எந்த ஊழியருக்குக் கையளிக்கப்பட்டனவோ, அந்த ஊழியர் எவரும், பொது முகாமையாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கமைவாக அவற்றைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(4) பொது முகாமையாளர் அமைச்சரின் முன்னங்கீகாரமின்றி பதவியினின்று அகற்றப்படாதிருக்கலாம்.

அதிகாரசபையின் பணியாட்டொகுதியினரை நியமித்தல் முதலியன.

**13.** (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக,—

(அ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவர்களென அதிகாரசபை கருதக்கூடியவாறான அத்தகைய பணியாட்டொகுதியினரை நியமிக்கலாம், விலக்கலாம் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் ;

(ஆ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் கூலியை அல்லது சம்பளத்தை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம் ;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் நலனுக்காக சகாய நிதியங்களை அல்லது செயற்றிட்டங்களைத் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன், ஏதேனும் அத்தகைய நிதியத்திற்கு அல்லது செயற்றிட்டத்துக்கு உதவுதொகைகளையும் வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அக்கருமங்கள் எவற்றினதும் தொடர்பில் அதிகாரசபையால் விதிகள் ஆக்கப்படலாம்.

(3) அதிகாரசபையின் வேண்டுதலின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், அவர் எந்த அமைச்சிலுல் அல்லது அமைச்சின்கீழ் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கின்றாரோ அந்த அமைச்சின் செயலாளரினதும், பகிரங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்தோடு அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கென அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினது ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினது ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்டதொரு காலத்துக்கு அரசாங்கத்துக்குச் சேவை செய்வதாக உடன்பாடு தெரிவிக்கும் ஒப்பந்தமொன்றினை அரசாங்கத்துடன் செய்துகொண்டுள்ள எவரேனும் ஆளை அதிகாரசபை வேலைக்கமர்த்துகின்றவிடத்து, அத்தகைய ஆளினால் அதிகாரசபைக்கு ஆற்றப்பட்ட சேவைக்காலம் எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) அதிகாரசபையின் வேண்டுதலின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர், அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் வேறு எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரினதும், அத்துடன், விடயத்திற்கேற்றவாறு உள்ளூராட்சிச்சேவை ஆலோசனைச் சபையினதும் அல்லது அவ்வுள்ளூரதிகாரசபையினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்தோடு அதிகாரசபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம்; அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பிலானவை உட்பட, அதிகாரசபையினாலும் விடயத்திற்கேற்றவாறு உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினாலும் அல்லது உள்ளூரதிகார சபையினாலும் உடன்பாடு செய்துகொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகள் என்பனவற்றின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) ஏழாம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு எவரேனும் ஆள் நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்

பினரைப் போன்றவாறான அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல்வேண்டும்.

## பாகம் IV

### நிதி

**அதிகாரசபையின் நிதியம்.**

14. (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் நிதியத்திற்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) அதிகாரசபை அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) எத்தன்மையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் என்ற வகையாக அதிகாரசபையினால் பெறப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) அதிகாரசபையின் வரவிற்திரளும் எல்லாப் பணத்தொகைகளும்.

(3) அதிகாரசபையின் அலுவல்களை முகாமைசெய்வதிலும், அதிகாரசபையின் தொழிலைக் கொண்டுநடாத்துவதிலும், அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கும், அதிகாரசபையின் ஊழியர்களுக்கும், ஊதியம் கொடுப்பதிலும் இச்சட்டத்தின்கீழும், வேறு எழுத்திலான சட்டத்தின் கீழும் அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அத்துடன் அதிகாரசபை காலத்துக்குக்காலம் அதிகாரமளிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நோக்கங்களுக்காகவும் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கும் அதிகாரசபையானது அதிகாரசபையின் நிதியத்தைப் பயன்படுத்தலாம்.

(4) அதிகாரசபையின் தொடக்க மூலதனம் பத்து இலட்சம் ரூபாவாதல் வேண்டும். தொடக்க மூலதனத் தொகையானது அமைச்சரின் கலந்தாலோசனையுடன் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தவணைகளில் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்வேண்டும் என்பதுடன், அத்தகைய பணத்தொகைகள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்படும் நிதியத்துள் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

**கடன் வாங்குவதற்கு அதிகாரசபைக்குள்ள தத்துவம்.**

15. அதிகாரசபையானது அமைச்சரின் சம்மதத்துடன் அல்லது அவரினால் அளிக்கப்பட்ட ஏதேனும் பொதுவான அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க இச்சட்டத்தின்கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் அதிகாரசபையின் கடப்பாடுகளை மேவுவதற்கு அதிகாரசபை தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப்பற்று என்றவகையாக அல்லது வேறுவகையாகத் தற்காலிகமாக கடனெடுக்கலாம் :

ஆயின், இப்பிரிவின்கீழ் அதிகாரசபையால் திரட்டப்பட்ட எவையேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பில் வெளிநிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டுமொத்தம், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை எந்நேரத்திலேனும் விஞ்சுதலாகாது.

**அதிகாரசபையின் நிதியாண்டும், கணக்குகளைக் கணக்காய்வு செய்தலும்.**

16. (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது அதிகாரசபையின் வரவு செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல், வாங்கல் என்பன தொடர்பில் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V
## பொது

**அதிகாரசபையின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்கசேவையாளர்களாகக் கருதப்படுதல்.**

17. அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கங்களுக்காகவும் அதன் கருத்தெல்லைக்குள்ளும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அதிகாரசபையானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.**

18. அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

**இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகார சபையினது பணிப்பின்மீது எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.**

19. (1) (அ) அதிகாரசபைக்கெதிராக, இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக ; அல்லது

(ஆ) அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக

துடர்ச்சி அல்லது குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபைக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் கொணரப்பட்ட ஏதேனும் குற்றவழக்கில் அல்லது தொடர்ச்சியில் அதிகாரசபையால் உறப்பட்ட ஏதேனும் செலவு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் குற்றவழக்கில் அல்லது தொடர்ச்சியில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதிகாரசபையால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள், அதிகாரசபையின் நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பிடு செய்யப்படுகின்றவரான அத்தகைய எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் குற்றவழக்கில் அல்லது தொடர்ச்சியில் உறப்பட்ட செலவெதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் முடிவுசெய்தால், அத்தகைய செலவு அத்தகைய குற்றவழக்கில் அல்லது தொடர்ச்சியில் அவரால் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து அவருக்குச் செலுத்தப்படுதல்வேண்டும்.

20. அதிகாரசபைக்கெதிராக கொணரப்படும் ஏதேனும் நடவடிக்கையில் அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக ஆளை அல்லது ஆதனத்தைப் பற்றும் ஆணையெதுவும் வழங்கப்படுதலாகாது.

அதிகாரசபையின் ஆளுக்கெதிராக அல்லது ஆதனத்திற்கெதிராக ஆணை எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

21. (1) அதிகாரசபையானது அதிகாரசபையினது அலுவல்களின் முகாமை தொடர்பிலும் அத்துடன் எக்கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குவதற்கு இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டதோ, அக்கருமங்கள் எல்லாவற்றினதும் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவற்றினதும் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

விதிகளை ஆக்குவதற்கு அதிகாரசபைக்குள்ள தத்துவம்.

(2) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதி எதுவும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும் வரையில் பயனுறுதலாகாது.

22. (1) ஏதேனும் அசைவுள்ள ஆதனம் அதிகாரசபையினது தொழிலின் நோக்கத்துக்கென கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்தும் உத்தேசிக்கப்பட்ட கொள்ளுதலை அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அங்கீகரிக்குமிடத்தும், அவ்வாதனம் பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல்வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க காணிகொள்ளுதல் சட்டத்தின்கீழ் கொள்ளப்படலாம் என்பதுடன் அதிகாரசபைக்குக் கைமாற்றவும்படலாம்.

காணி கொள்ளுதல் சட்டத்தின்கீழ் அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல்.

(2) காணிகொள்ளுதல் சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்காகக் காணியைக் கொள்ளுவதற்கெனச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை அதிகாரசபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

**அசைவுள்ள அசைவற்ற அரச ஆதனம் அதிகார சபைக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்வித்தல்.**

23. (1) அதிகாரசபையின் ஏதேனும் தொழிலினது நோக்கத்துக்கென அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ், எந்த நோக்கத்துக்கென அத்தகைய ஆதனத்தின் சிறப்பு அளிப்பொன்று அல்லது குத்தகையொன்று வழங்கப்படக்கூடுமோ அந்த நோக்கமொன்ருகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அந்தக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், அதிகாரசபைக்கென அத்தகைய ஆதனத்தின் சிறப்பு அளிப்பொன்றுக்கு அல்லது குத்தகையொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் நோக்கத்துக்கென அமைச்சரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் தேவைப்படுத்தப்படுமிடத்து, அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் அதிகாரசபைக்குக் கைமாற்றலாம்; அத்துடன் அதற்கு உரித்தாக்கலாம்.

**ஏதேனும் காணிக்குள் அல்லது வளவுக்குள் பிரவேசிப்பதற்குள்ள தத்துவம்.**

24. அதிகாரசபையின் தவிசாளர் அல்லது அவரால் பொதுவாக அல்லது சிறப்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் ஏதேனும் காணியின் அல்லது வளவின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னறிவித்தல் கொடுத்ததன்பின்னர் அத்தகைய காணிக்குள் அல்லது வளவுக்குள் பிரவேசிப்பதும், அதிகாரசபையின் ஏதேனும் பணியை நிறைவேற்றுவதற்கு நியாயமாக அவசியப்படக்கூடியவாறான அத்தகைய செயல்களைப் புரிவதும், அல்லது அதிகாரசபையின் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு, அல்லது ஏதேனும் பணியை நிறைவேற்றுவதற்கு முதனிலையான அல்லது அதன் இடைநேர் விளைவான ஏதேனும் புலனாய்வை அல்லது சோதனையைச் செய்வதும் சட்டமுறைமையானதாதல் வேண்டும்.

**தவறுகளும் தண்டங்களும்.**

25. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் விதியை, கட்டளையை, பணிப்பை அல்லது தேவைப்பாட்டை மீறுகின்ற அல்லது அவற்றிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வோர் ஆளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**பொருள் கோடல்.**

26. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினலொழிய—

"அரசாங்க மூகவர்நிலையம்" என்பது, ஓர் அரசாங்கத் திணைக்களம், உள்ளூரதிகாரசபை அல்லது ஒரு பகிங்கக் கூட்டுத்தாபனம் என்று பொருள்படும்;

"வீதிகளின் சீர்திருத்தங்கள்" என்பது, ஏதேனும் வீதியை அகலமாக்குதல், வீதிகளை மட்டமாக்குதல், பாதசாரிகளின் பாவனைக்கென நடைபாதைகளை ஏற்பாடு செய்தல், தூசியின் தொல்லையைத் தணிப்பதற்கென வீதியொன்றை செப்பனிடுதல், வீதி

களில் மரங்களை நடுதலும் புல்லினின்று எல்லைக்கோடுகள் பதித்தல், அத்துடன் ஏதேனும் உளதாம் வீதிகளைத் தகுந்த சீர்திருத்த நிலையில் வைப்பதற்கு அத்தியாவசியமான சாதாரண சீர்திருத்தங்களுக்கு அப்பாற்பட்ட வீதிகளின் தொடர்பில் வேறு ஏதேனும் வேலைகள் செய்தல் என்பவற்றை உள்ளடக்கும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் அபிவிருத்திச்சபை, மாநகர சபை, நகரசபை, பட்டினசபை, அல்லது கிராமசபை என்று பொருள்படும் என்பதுடன், அத்தகைய சபையால் பிரயோகிக்கப்படும், நிறைவேற்றப்படும் அத்துடன் புரியப்படும் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றை நேரொத்த அல்லது அவை போன்ற தத்துவங்களை, கடமைகளை, பணிகளைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையை உள்ளடக்கும் ;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, கொடைமூலம், கடன்மூலம், அல்லது வேறு வகையில் அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியங்களைக் கொண்டு அல்லது மூலதனத்தைக் கொண்டு, கம்பெனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருள்படும் ;

"வீதி" என்பது, பொதுவழிகள் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"வீதி அபிவிருத்தி" என்பது, புதிய வீதிகளை நிருமாணித்தல், அல்லது உளதாம் வீதிகளைப் பேணுதல் அல்லது செம்மைப்படுத்துதல் என்று பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.